Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம் வருஷம் எப்ரல்மீ 12உ, சனிக்கிழமை. [இதழ் ந. 4.

## வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, பகைவர்களுடைய முக்கியமான இடங்களில் சென்ற வாரம் வெடிகுண்டு மாரி பொழிந்தது. ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரான்சு தேசத்தின் முக்கியமான கடற்கரைத் தளமாகிய பிரெஸ்டு என்ற வட மேற்கு முனையை, பிரிட்டிஷ் வெடிகுண்டு விமானப்படை நன்ருகத் தாக்கியது. அப்போது அத் துறைமுகத்தில், பகைவர்களுடைய யுத்தக் கப்பல்கள், "ஷார்ன் ஹார்ஸ்ட்", "நீசினோ்", இரண்டும் தங்கியிருந்தன. அங்கு போட்ட வெடிகுண்டுகள் கரையிலுள்ள கப்பற்சாலைகள்மேல் விழுந்து, துறைமுகத்தில் அநேக இடங்களில் நெருப்புப் பற்றிக்கொண்டது. யுத்தக் கப்பல்கள் மேல் நன்ருக விழுந்ததாகவும் தெரிகிறது.

ராட்டர்டம் என்ற ஹாலந்திலுள்ள எண்ணெய் சேமித்துவைத்த பெருங்களஞ்சியங்கள் மேலும், ஆஸ்டெண்டு என்ற பெல்ஜியக் கரையோரக் கப்பற்சாலை மேலும், பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையால் வெடிகுண்டுகள் போடப்பட்டன.

வடக்கு பிரான்சில், பகைவர்களுடைய ஆகாய விமானச்சாலைகள் மீதும், விமானக் கூடாரங்கள் மீதும், பெல்ஜியத்திலுள்ள ஒரு ஆகாய விமானச்சாலை மேலும், பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன.

ஜெர்மன் ஆகாய விமானப்படை மேற்கு இங்கிலாந்தின் மேல் பறந்து வெடிகுண்டுகள் போட்டதன் பயனுக, கொஞ்சம் சேதம் ஏற்பட்டிருக்கிறது. விமான எதிர்ப்புப் பீரங்கிகளால், ஜெர்மன் விமானங்கள் துரத்தப்பட்டன. ஒரு ஜெர்மன் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு, "இங்கிலீஷ் சானல்" என்ற ஆங்கிலக் கால்வாயில் விழுந்துவிட்டது.

தென்மேற்கு இங்கிலாந்தில், இம்மாதிரியான விமானப்போரில், நான்கு ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

சென்ற சனிக்கிழமை இரவு லண்டன் நகரத்தில் வெடிகுண்டுகள் போடப்படவில்லை. இப்படி போடாதது தொடர்ச்சியாக 16-ம் நாள் இரவு என்று சொல்லப்படுகிறது.

### 2. ஆப்பிரிக்காவும் மத்தியதரைக் கடலும்.

சென்ற வாரம், ஆப்பிரிக்காவில் மகத்தான வெற்றியைப் பிரிட்டன் அடைந்திருக்கிறது. அபிசீனியாவின் தலைநகராகிய அட்டிஸ் அபாபா பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டது. எதேச்சாதிகார அதிக்கிரமத்தில் முதன் முதலில் அடிமையான அபிசீனியா கடைசியில் சுதந்தர நாடாக ஆய்விட்டது என்று லண்டனில் உள்ள அபிசீனிய சக்கிரவர்த்தினி, தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிருர்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு, தம்முடைய நன்றியறிதலையும் தெரிவித்திருக்கிருர்.

அட்டிஸ் அபாபா என்பது 1896-ம் வருஷம் அபிசீனியாவுக்குத் தலைநகராயிற்று. 1936-ம் வருஷம் மேமீ 5உ, அது இடாலியர்களால் பிடிக்கப்பட்டது. ஐந்து வருஷங்களாக, இடாலியர்களுடைய ஆட்சியிலிருந்த அட்டிஸ் அபாபா இப்போது பிரிட்டிஷார் கையிலிருக்கிறது.

ராஸ் சீயம் என்ற பழைய அபிசீனியத் தலைவர், பிரிட்டிஷாருக்கு தன்னாலான உதவியைச் செய்வதாக உறுதி கூறியிருக்கிருர். அபிசீனிய தேசாபிமானிகள் இயக்கத்துக்கு விரோதமாக, ஒரு இயக்கத்தை ஆரம்பித்து அதற்குத் தலைவராக இருக்கும்படி ராஸ் சீயத்தை இடாலியர்கள் கேட்டார்கள். அப்படிச் செய்தால், அபிசீனியாவுக்குச் சக்கிரவர்த்தியாக முடி சூட்டுவதாக வாக்களித்தார்கள். ஆனல் ராஸ் சீயம் தம்முடைய தேசத்துக்குத் துரோகம் செய்ய மறுத்துவிட்டார்.

அடோவா என்ற இடத்துக்கருகில் ஒரு இடாலிய உள்நாட்டுப்படை, பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டது.

அஸ்மாராவில் 5,000 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டார்கள். அவர்களுள் 4,000 பேர் இடாலியர்கள்.

பென்காசியை விட்டுவிட்டு பிரிட்டிஷ் படைகள் சென்றது அவ்வளவு முக்கியமான காரியமல்ல. பகைவர்களுடைய 'டாங்க்' கிகள் தாக்கும்போது, காலாட்படைகளை விட்டுவைப்பது மிகுந்த சேதத்துக்கு இடமாகுமென்றும், வேறொரு தயாரான இடத்திலிருந்து போரைத்தொடர்ந்து நடத்தலாமென்ற எண்ணத்துடன் தான் பென்காசியை விட்டுப்போனதென்றும், ஒரு பொறுப்பான உத்தியோகஸ்தர் கூறுகிருர். கொஞ்ச காலமாக, ஜெர்மனியர்கள் தகுந்த யுத்த தளவாடங்களுடன் டிரிபோலி என்ற ஆப்பிரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பட்டணத்தைச் சேர்ந்திருக்கிருர்கள் என்று தெரிந்தது. "டாங்க்" கிகள், காலாட்படை, ஆகாய விமானப்படைகளடங்கிய இடாலியத் துருப்புகளும், ஜெர்மானியத் துருப்புகளும் தயாராயிருந்தன. எந்த சமயத்தில் முன்னேக்கிச் செல்லவேண்டுமோ அப்போது முன்னேக்கியும், எப்போது பின்னேக்கிச் செல்லவேண்டுமோ அப்போது பின் செல்வதும் யுத்த தந்திர முறையானதால், ஜெனரல் வேவல் என்ற யுத்த நிபுணர் பென்காசியில் அதைக் கையாண்டார் என்று தெரிகிறது. வடக்காப்பிரிக்கா போரின் முடிவும், மத்திய ஐரோப்பா போரின் முடிவும், மத்தியதரைக் கடல் யுத்தத்தைத்தான் பொறுத்திருக்கிறது. பென்காசியைப் பிடித்துவிட்டதால் ஜெர்மனி ஒரு பிரமாதமான வெற்றியைக் கண்டதாகக் கூறமுடியாது. அந்த வெற்றியும் நீடித்து நிற்பது கொஞ்சம் சந்தேகம்தான்.

செவ்வாய்க்கிழமை வெளிவந்த செய்திகளால், அட்டிஸ் அபாபா சரணுகதி யடைந்ததென்றும், இடாலியத் துருப்புகள் வடக்கு நோக்கி ஓடிவிட்டதென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் அவைகளைப் பின்பற்றிப் போய்க்கொண்டிருக்கின்றனவென்றும், அபிசீனியாவில் முன்பு சக்கரவர்த்தியாயிருந்த ஹெயில் செலாசி என்பவருடைய மாளிகையின் மேல் பிரிட்டிஷ் கொடி இப்போது பறக்கிறதென்றும், அட்டிஸ் அபாபாவுக்கு 90 மைல் வட மேற்கில் உள்ள டெப்ரா மார்க்கோஸ் என்ற இடம் பிரிட்டிஷ் துருப்புகளால் பிடிக்கப்பட்டனவென்றும் தெரிகிறது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அமெரிக்காவில், பிரிட்டனுக்கு உதவிசெய்யும் முயற்சி மிகத்துரிதமாக நடந்து கொண்டு வருகிறது. இப்போது 15,000 ஆகாய விமானங்கள், 5,000 'டாங்க்' கிகள், 330 வர்த்தகக் கப்பல்கள், செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தாகிவிட்டது என்று தெரிகிறது. ஆகாய விமானங்கள் பெரும்பாலும் வெடிகுண்டு விமானங்களாக இருக்குமென்றும், அவைகளில் 13,000 பிரிட்டிஷ் ஆகாய விமானப் படைக்கும், மற்றவை கப்பற்படையின் துணைப்படையான விமானப்படைக்கும் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனுக்கு ஒதுக்கப்பட்ட 700 கோடி டாலர்களில் 50 கோடி டாலர்கள் 212 வர்த்தகக் கப்பல்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று, பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் அறிவித்திருக்கிறார். இந்தக் கப்பல்கள் 50 அல்லது 60 புதிய கப்பல் கட்டும் சாலைகளில் கட்டப்படும்.

ஜெர்மனியினுடையதும், இடலியினுடையதுமான கப்பல்களை அமெரிக்கா சட்ட விரோதத்துக்காக கைப்பற்றியது. அதைக் கண்டித்து ஜெர்மனியும், இடலியும் அமெரிக்கா அரசாங்கத்துக்கு அறிக்கை அனுப்பியிருக்கிறது. அக்கப்பல்களைத் திருப்பிக் கொடுக்கும்படி அவைகள் கேட்டிருக்கின்றன. ஆனால் அமெரிக்க அரசாங்கம் அந்தக் கப்பல்களைத் திருப்பிக்கொடுக்க முடியாதென்றும், கப்பல்களைச் சேர்ந்தவர்கள் கப்பல்களை நாசம் செய்ய முயற்சித்தார்களென்றும், சில கப்பல்கள் பழுதாக்கப்பட்டிருக்கின்றனவென்றும், மிஸ்டர் கார்டல் ஹல் என்ற அமெரிக்க மந்திரி தெரிவித்திருக்கிறார்.

### 4. கிரீசும், இடலியும்.

பல்கேரியாவிலுள்ள ஜெர்மானியத் துருப்புகள் கிரீசைத் தாக்கின. ஜெர்மனியின் ஸ்தானீகர் கிரீசின் முதன் மந்திரிக்கு இதைப்பற்றி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறார். அதில், கிரீசிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளை நீக்குவதற்காகத்தான் ஜெர்மனி படையெடுத்ததே ஒழிய, கிரேக்கர்கள்மேல் ஜெர்மனிக்கு யாதொரு கெட்ட எண்ணமும் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறது. இது வழக்கமாக இதற்கு முன் ஜெர்மனி மற்ற நாடுகளைத் தாக்கியபோது கூறிய வார்த்தைகளே ஒழிய வேறல்ல.

கிரேக்கத் துருப்புகளுக்கு விடுக்கப்பட்ட உத்தரவில், "இறத்தலைப்பற்றி நமக்குக் கவலையில்லை" என்ற கிரேக்க கொள்கை மாறவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

கிரீசிலுள்ள ஸ்ட்ரூமா பள்ளத்தாக்கில் கிரேக்கர்கள் ஜெர்மானியர்களை தைரியத்துடன் தடுத்து வருகிறார்கள்.

கிரேக்கத் துருப்புகள் யுத்த அரங்கத்துக்குப் போகும்போது, "தேசம் வாழ்க, அரசர் வாழ்க, படை வாழ்க, கடவுள் நமது பக்கம் இருக்கிறார்" என்ற கோஷடத்துடன் சென்றார்கள்.

செவ்வாய்க்கிழமை வெளியான செய்திகளில் கிரீஸ் தேசத்தின் பல பட்டணங்களிலும், கிராமங்களிலும், ஜெர்மன் விமான வெடி குண்டுகள் விழுந்தன வென்றும், ஆனால் கிரேக்கர்கள் ஜெர்மானியர் முன்னேறி வருவதைத் தடுத்துக்கொண்டு வருகிறார்களென்றும் தெரிகிறது.

### 5. பால்கன்ஸ்.

ஜெர்மன் துருப்புகள் யூகோஸ்லாவியாவின்மேல் படையெடுத்தன. அதன் தலைநகரான பெல்கிரேடின்மேல் ஜெர்மன் ஆகாய விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. பெல்கிரேடின் ரயில்வே ஸ்டேஷன்மேல் போட்ட வெடிகுண்டுகளினால், ஸ்டேஷன் நெருப்புப்பற்றிக்கொண்டது.

ரஷ்யாவுக்கும், யூகோஸ்லாவியாவுக்கும் நட்பு ஒப்பந்தம் சென்ற ஞாயற்றுக்கிழமையன்று கையெழுத்திடப்பட்டது. ரஷ்யாவின் முதன் மந்திரியும், அயல் நாட்டு மந்திரியுமான முசியோ மாலதோவ், யூகோஸ்லாவியாவின் ஸ்தானீகர் முசியோ கேபிரிலோவிச் ஆகிய இருவரும் தங்களுடைய நாடுகளின் சார்பாகக் கையெழுத்திட்டார்கள். லண்டனிலும், அமெரிக்காவிலும் இந்த ஒப்பந்தத்தை வரவேற்று, இது தைரியப்படத்தக்க ஒரு நல்ல சமாச்சாரம் என்று அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருக்கிறது. மிஸ்டர் சம்னர் வெல்ஸ் என்ற அமெரிக்க உதவி மந்திரி கூறியதாவது :—"இந்த ஒப்பந்தம் மிக முக்கியமானது. இது யூகோஸ்லாவியாவுக்கும், கிரீசுக்கும் தைரியங்கொடுக்கும் ஒப்பந்தம். இது துருக்கிக்கும் முக்கியமானது". அமெரிக்கா கப்பற்படை மந்திரி, கர்னல் நாக்ஸ் கூறியதாவது :—"ஜெர்மனியினுடைய செய்கை அமெரிக்கா அரசாங்கத்துக்கு யாதொரு வித ஆச்சரியத்தையும் உண்டுபண்ணவில்லை. யூகோஸ்லாவியாவுக்கும், கிரீசுக்கும், எங்களால் எவ்வளவு வெடிகுண்டு சாமான்கள் அனுப்பமுடியுமோ, அவ்வளவையும் அனுப்பப்போகிறோம்".

யூகோஸ்லாவியா ஜெர்மானிய நாடாகிய ரூமேனியாவின் மேல் வெடி குண்டுகளைப் போட்டன வென்றும், மறுபடியும் ஜெர்மானியர்கள் யூகோஸ்லாவியாவின் தலைகராகிய பெல்கிரேடைத் தாக்கினார்களென்றும் தெரிகிறது.

### 6. கப்பல் நிலைமை.

மூன்று இடாலிய யுத்தக் கப்பல்கள் சிகப்புக் கடலில் இடாலியர்களாலேயே முழுகடிக்கப்பட்டன. பிரிட்டிஷார் கையில் அகப்படாமல் முழுகடித்த போதிலும், இடாலியக் கப்பற்படைக்கு இது ஒரு பெருத்த நஷ்டம். சென்ற சில நாட்களில் சிகப்புக் கடலில் முழுகடிக்கப்பட்ட கப்பல்கள் 5. இவைகளெல்லாம் போக இன்னும் இடாலியர்களிடம் 3 யுத்தக் கப்பல்கள், 2 'டார்பிடோ' படகுகள், 2 அல்லது 3 சப்மரீன்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. இவைகளைப் பிரிட்டிஷ் கப்பற்படை சிகப்புக் கடலில் தேடிக்கொண்டு இருக்கிறது.

### 7. ஜப்பானும் சைனாவும்.

பிரிட்டன், அமெரிக்கா இவைகளுடைய உதவியில்லாமல் சாமான்கள் பெறுவதற்கு ஜப்பானில் ஒரு தேசியத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்காக ஜப்பானிய மந்திரி சபையில் பொருளாதார முக்கிய ஸ்தானங்களுக்கு புதியவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

டாக்டர் வெல்லிங்டன் கூ என்பவர் சீனாவின் ஸ்தானீகராக லண்டனில் நியமிக்கப்படலாம் என்று ராய்டர் நிருபர் கூறுகிறார். டாக்டர் கூ இப்போது விஷியில் சீனாவின் ஸ்தானீகராக இருக்கிறார். அவர் சீனாவுக்காக அகில தேசீய சங்கத்தில் போராடி பெரும் புகழ்பெற்றவர்.

### 8. விஷி.

விஷி அரசாங்கத்தைப் பிரிட்டனுடன் பொருளாதார முற்றுகை சம்பந்தமாகப் போர் புரியும்படி ஜெர்மனி தூண்டிக்கொண்டிருக்கிறது. ஆனால் அட்மிரல் தார்லான் நடக்கப்போகிற விஷயங்களைப் பார்த்துக்கொண்டு முடிவு செய்யலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறதுபோல் தோன்றுகிறது. பிரான்சு தேச மக்களில் பெரும்பாலோர் பிரிட்டன் வெற்றியடைய வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

### 9. ஜெர்மனியின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள்.

இந்நாடுகளின் நிலைமையைப்பற்றி சென்ற வாரம் முக்கியமான விவரங்கள் ஒன்றும் வெளியாகவில்லை.

### 10. நடுநிலைமை நாடுகள்.

ரஷ்யா, யூகோஸ்லாவியாவுடன் செய்து கொண்ட நட்பு ஒப்பந்தம் ரஷ்யாவில் நடுநிலைமையைக் கூடிய சீக்கிரம் மாற்றிவிடுமா என்று நினைக்கும்படியாய் இருக்கிறது.

---

## ஜெர்மனி யூகோஸ்லாவியாவின்மீதும் கிரீஸின்மீதும் படையெடுக்கிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை ஜெர்மனியானது யூகோஸ்லாவியாவின்மீதும் கிரீஸின்மீதும் படையெடுத்தது. யூகோஸ்லாவியாவின் கிழக்கில் அட்ரியாடிக் கடல் இருக்கிறது; இத்தாலி அக்கடலுக்கு அப்பாலுள்ளது; ஜெர்மன் ஆக்ரமிப்புக்குட்பட்டிருக்கும் ஆஸ்ட்ரியா தேசம் யூகோஸ்லாவியாவிற்கு வடகிழக்கிலும், ஹங்கேரி நேர் வடக்கிலும், ருமேனியாவும் பல்கேரியாவும் கிழக்கிலுமுள்ளன. ஜெர்மனியின்கீழுள்ள ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா ஆகிய இம்மூன்று தேசங்களிலும் ஜெர்மனி ஏராளமான இயந்திர துருப்புப் பிரிவுகளையும் ஆகாய விமானங்களையும் வைத்திருக்கிறது. யூகோஸ்லாவியாவின்மீது படை யெடுத்ததற்கு காரணங்கள் அடியிற் குறிப்பிட்டவையாகும் :—

1. யூகோஸ்லாவிய சர்க்கார் சிறுபான்மையோராகிய ஜெர்மனியர்களைத் துன்புறுத்தினதாக சொல்லப்படுகிறது. ஆனால், இது உண்மையல்ல. ஏனெனில், இக்கூற்றை யூகோஸ்லாவ் கவர்ன்மெண்டாரும்

சிறுபான்மையோராகிய ஜெர்மனியர்களின் தலைவர்களும் அறவே மறுக்கிறார்கள். இவைகளிலிருந்து ஷெ கூற்று மிகவும் தவறுள்ளதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்குகிறதல்லவா?

2. யூகோஸ்லாவியர்கள் ஜெர்மனிக்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுத்தார்கள். சிறிய தேசமாகிய யூகோஸ்லாவியா ஒரு பெரிய தேசத்தினிடம் வாலாட்டமுடியுமா! ஆகவே ஜெர்மனிக்குக் கோபம் மூண்டது! மேலும், யூகோஸ்லாவியா ரீஜென்டான பால் இளவரசர் ஜெர்மனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அவருக்குப்பின் ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொண்ட பீடர் அரசர் இன்னும் ரத்து செய்யவில்லை. ஆயினும், புதிய யூகோஸ்லாவ் கவர்ன்மெண்ட் தன்னுடைய உத்தரவுகளுக்கு கீழ்ப்படிந்து நடக்காதென்று ஜெர்மனி கருதுகிறது. ஆகவே, அது யூகோஸ்லாவியாவின்மீது படையெடுத்தது! ஹிட்லர் தம் வார்த்தைகளுக்கே மதிப்பு கொடுப்பவரல்ல. மேலும், அவர் மிகவும் அநாகரீகமாய்ப் பேசுபவர். அவர் தம்முடைய படைகளைப் பார்த்து யூகோஸ்லாவியாவிலுள்ள தமது விரோதிகளாகிய 'குண்டர்களின் கூட்டம்' அடியோடு ஒழியும்வரையிலும், ஒரு பிரிட்டனாவது அங்கே இருக்கும் வரையிலும் அவர்கள் சண்டை செய்யவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார். யூகோஸ்லாவியா ஒரு சிறிய தேசம். அங்கே ஒன்றேகால் மில்லியன் ஆட்களையுடைய சிறிய படைதான் இருக்கிறது. ஆயினும் அவர்கள் எல்லோரும் மிகவும் தைரியசாலிகள். தம் உடல்களில் கடைசி மூச்சு இருக்கும் வரையிலும் விடாது போர்புரிபவர்கள். பயமென்பது இன்னதென்பதே அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் எல்லாம் சரியான பயிற்சி பெற்றவர்கள். ஆனால், அவர்களுக்கு நவீன யுத்த தளவாடங்கள் இல்லாமலிருக்கலாம். அவர்களுக்கு சற்று சுமாரான ஆகாயவிமானப் படையும் உண்டு. ஆயினும் தம் சுதந்திரத்தைப் பாதுகாக்கவேண்டுமென்ற ஆர்வமும் அசாத்தியமற்ற தீரமும் அவர்களுக்கு நிறைய உண்டு. ஜெர்மன் படைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு இவ்விரண்டுமேபோதும்.

யூகோஸ்லாவியாவின் தலைநகராகிய பெல்கிரேட் ஒரு 'திறந்த' பட்டணமாக ஆக்கப்பட்டிருந்தும், ஜெர்மனியர்கள் அதன்மீது வெடிகுண்டுகளைப் பொழிந்தார்கள். அதன் காரணமாக அநேக இடங்களில் தீப்பற்றிக்கொண்டது.

கிரீஸின்மீது ஜெர்மனிக்குள்ள கோபமெல்லாம் அது பிரிட்டிஷ் துருப்புகளை அங்கே வரவழைத்தது என்பதுதான். ஆனால் ஹிட்லர் அநேக நாட்களுக்கு முன்னமேயே கிரீஸின்மீது படையெடுக்க வழிகள் வகுத்தார். ஆகையால் ஹிட்லர் சொல்லும் காரணம் ஒரு வடிகட்டின பொய். கிரீஸின் வடமேற்கில் யூகோஸ்லாவியாவும், வடகிழக்கில் பல்கேரியாவும், மேற்கில் அல்பேனியாவும், கிழக்கில் துருக்கியும் இருக்கின்றன. ஜெர்மன் படைகள் கிரீஸை சேர்ந்த திரேஸை முதன் முதலில் தாக்கினார்கள். ஆயினும் கிரேக்கர்கள் ஸ்ட்ருமா பள்ளத்தாக்கில் தமது பகைவர்களுடன் தீவிரமாய்ப் போராடிக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. ஸ்ட்ருமா என்பது பல்கேரியாவிலிருந்து கிரீஸுக்கு ஓடும் ஒரு நதி. இதாலியர்களுடன் தீவிரமாய் போர்புரிந்த கிரேக்கர்கள் ஜெர்மனியர்களையும் தட்டி மடக்குவார்களென்று நம்பலாம்.

பால்கன் யுத்த நிலைமையில் அடங்கியுள்ள சில விஷயங்கள் கவனிக்கத்தகுந்தவை. முதலாவது பிரிட்டிஷார் யூகோஸ்லாவியாவுக்கு உதவியளிப்பதாக வாக்களித்துள்ளார்கள். பிரிட்டிஷ் தரைப் படைகள் தற்போது கிரீஸில் உள்ளன. அவைகள் அங்கே சில வாரங்களாகவே வைத்துவரப்படுகின்றன. ஏனெனில் சென்ற சிலவாரங்களாகவே ஜெர்மனி கிரீஸின்மீது படையெடுப்பதாகச் சொல்லிவந்துள்ளது. கிரீஸில் பிரிட்டிஷ் படைகள் இருக்கும் சங்கதி சில முக்கியமான காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. கிழக்காப்பிரிகா யுத்தம் தற்போது அனேகமாக முடிந்துவிட்டது. ஆகவே எண்ணற்ற பிரிட்டிஷ் படைகள் அங்கிருந்து பிரிட்டிஷ் கப்பல்களினுதவியால் கிரீஸுக்கு கொண்டுவரப்பட்டன. அவைகளுடன் ஏராளமான யுத்த கருவிகளும் கொண்டுவரப்பட்டன. இதல்லாமலும், பால்கனிலுள்ள பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையின் பலமும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனியுடன் கிழக்கில் செய்யும் யுத்தத்துக்கு பிரிட்டிஷ் கப்பற்படை தன்னாலான எல்லா விதமான உதவியும் அளிக்கும். இதுவரையில் தன்னுடன் சேர்ந்திருந்ததும், கொடுந்துரோகியான முஸலோனியை எதிர்த்து நின்றதுமான கிரீஸை பிரிட்டன் எவ்வாறு கைவிடமுடியும்?

மற்றொரு முக்கியமான விஷயம் யாதெனில், அமெரிக்கா யூகோஸ்லாவியாவுக்கு உதவியளிப்பதாக வாக்களித்திருக்கிறது. ஏற்கெனவே கிரீஸானது அமெரிக்காவின் உதவியைப் பெற்றுவருகிறது. ஆகவே இவ்விருதேசங்களும் தம் சுதந்தரத்துக்காகப் போர்புரிகின்றனவென்று பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டுக்குத் தெரியுமாகையால், அவைகள் அவரிடமிருந்து உதவி பெறுவது நிச்சயம்.

துருக்கியின் நிலைமை மிகவும் சிக்கலானது. ஏனெனில் துருக்கியின்மீது தாம் படையெடுக்கப் போவதில்லையென்று ஹிட்லர் சொல்லியுள்ளார். ஹிட்லரின் வார்த்தைகளை யாரால் நம்பமுடியும்? ஆகவே துருக்கியும் எவ்வித நிலைமையையும் சமாளிக்க தயாராய் காத்துக்கொண்டிருக்கிறது.

கடைசி விஷயம் ரஷ்யாவைப்பற்றியது. யூகோஸ்லாவியாமீதும் கிரீஸ்மீதும் ஹிட்லர் படையெடுப்பதற்கு சில நாட்களுக்குமுன் ரஷ்யா கவர்ன்மெண்டுக்கும் யூகோஸ்லாவ் கவர்ன்மெண்டுக்கும் ஒரு ஒப்பந்தம் நிறைவேறி கையெழுத்துமிடப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் ஷெ இரண்டு தேசங்களும் ஒன்றையொன்று தாக்காது. ஆகையினால் இவ்வொப்பந்தத்துக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன. இவ்விரு தேசங்களில் யாதொன்றையாவது வேறொரு மூன்றாம் தேசம் தாக்குமேயானால், இவ்வொப்பந்தத்தில் கையெழுத்திட்ட மற்றொரு தேசம் அப்படி தாக்கப்பட்ட தேசத்துடன் சினேகமாய் இருக்கவேண்டுமென்பதுதான் இவ்வொப்பந்தத்தின் முக்கிய ஷரத்து. இந்த உடன்படிக்கை 5 வருஷங்களுக்கு அமுலில் இருக்கும். ஜெர்மனி பால்கன் பிரதேசத்தில் சண்டையுண்டாக்குவதை ரஷ்யா விரும்பவில்லை. ஆகவே அங்கு சண்டை மும்முரமானால் ரஷ்யா தன்னுடைய நடுநிலைமை கொள்கையை விட்டு விட்டு, ஜெர்மனியை எச்சரிக்கும். ஆனாலும் ரஷ்யா மிகவும் சுயநலம் வாய்ந்தது. ஆகவே அது, யூகோஸ்லாவியாவும் கிரீஸும் பிரிட்டிஷாரின் உதவியால் ஜெர்மனியை எதிர்த்துப் போராடினால்தான், ஒரு தைரியமான வழியை பின்பற்றும்.

## ஜப்பானுடைய கனவுகள்.

### பிற நாடுகளை ஜெயிக்க வேண்டுமென்ற பேராசை.

[ஜப்பான் என்பது கிழக்கே அதிக தூரத்திலுள்ள சில தீவுகளடங்கிய நாடு. சீன தேசத்துக்கும், ஜப்பானுக்கும் ஆதிகாலந்தொட்டு சண்டை நடந்து கொண்டிருக்கிறது. இப்போது கிழக்கு அரங்கத்தில் நடக்கும் யுத்தத்தில் சீன தேசத்தில் சில பாகங்களை ஜப்பான் கைப்பற்றியுள்ளது. எப்படி ஜெர்மனி ஐரோப்பாவைத் தன்னுடைய ஆட்சியின்கீழ் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்துடன் இருக்கிறதோ, அதுபோல ஜப்பான், ஆசியா கண்டம் முழுவதையும் தன்னுடைய ஆட்சியின்கீழ் கொண்டுவரவேண்டுமென்ற பேராசையுடன் இருக்கிறது. இதற்காக ஒருவருக்கொருவர் உதவி செய்வது என்ற முறையில், ஜப்பான் ஜெர்மனியுடனும், ஜெர்மனியினுடைய சகாவாகிய இடலியுடனும் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதற்கு ரோம்–பர்லின்–டோக்கியோ அச்சு ஒப்பந்தம் என்று பெயர். இந்த மூன்று நகரங்களும் முறையே, இடலி, ஜெர்மன், ஜப்பான் ஆகியவைகளின் தலைநகரங்கள். இந்த அச்சு ஒப்பந்தத்தை பலப்படுத்துவதற்காக மிஸ்டர் மத்சூகா என்ற ஜப்பானின் அன்னியநாட்டு மந்திரி, ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அவரு

டைய சுற்றுப்பிரயாணத்தால் என்ன நடந்த தென்றும், யுத்தத்தில் ஜப்பானின் தற்கால நிலைமை என்னவென்றும், கீழ்க்கண்ட கட்டுரை விளக்கமாகக் கூறுகிறது :—]

ஜப்பானின் அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் மத்சூகா, மாஸ்கோ, பர்லின், ரோம் என்ற ஐரோப்பிய தலை நகரங்களுக்கு விஜயம்செய்து விட்டு, தம்முடைய ஊர கிய, டோக்கியோவுக்கு போகிறார். பர்லினை விட்டுப்போகும்போது, மூன்று வல்லரசுகள் ஒப்பந்த மாகிய அச்சு ஒப்பந்தத்தின் அடிப்படையான கொள் கை நன்றாகவிளக்கப்பட்டுவிட்டதென்றும், தான் பர் லினுக்குப்போய் இந்த விஷயத்தைத் தெளிவுபடுத் திவிட்டதால், ஜப்பானுக்குச் சௌகரியமென்றும், மிஸ்டர் மத்சூகா கூறினார். ரோமை விட்டுப் போகும்போது, அச்சு ஒப்பந்தம் நூறு வருஷம் வரைக்கும் நிலை பெற்றிருக்கும் என்றார். ஆனால் மாஸ்கோவுக்குப் போய்த் திரும்பி பிறகு, அவர் ஒன்றுமே சொல்லவில்லை. இந்த மௌனத்தில் ஒரு ரகசியம் இருக்கிறது!

ஹிட்லர், முசலோனி, மத்சூகா ஆகிய மூவரும் கலந்து பேசியபோது, உலகத்தில் அச்சு வல்லரசு கள் தலைமை ஸ்தானத்தில் இருப்பதற்கு எவ் விதமான தந்திரங்களும், சூழ்ச்சிகளும் செய்ய லாம் என்பது பற்றித்தான் பேசியிருப்பார்கள். பிற நாடுகள்மேல் அக்கிரமமாகப் படை யெடுப்பதைப் பற்றி, ஜப்பானுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியதே இல்லை; ஹிட்லருக்கும், முசலோ னிக்கும் முன்பாகவே ஜப்பான் அதிக்ரமமான காரி யங்கள் செய்திருக்கிறது. மற்ற இரண்டு சர்வாதி காரிகளைப்போல், மிஸ்டர் மத்சூகாவும், ஒரே சம யத்தில் உலக சமாதானத்தைப் பற்றிப்பேசி, சமா தானமாக இருக்க விரும்பும் நாடுகளைப் பயமுறுத் தும்படியான திறமையைக் காட்டியிருக்கிறார். சென்ற யுத்தத்தில், ஜப்பான் குடியாட்சி நாடு களுக்கு உதவிசெய்தது; இந்த யுத்தத்தில் அவை களுக்கு விரோதமாக, சர்வாதிகார நாடுகளுக்கு உதவி செய்கிறது. இதிலிருந்து, தன்னுடைய பழைய கொள்கைகளிலிருந்து, அது எவ்வளவு தூரம் விலகிப் போயிருக்கிறதென்பது விளங்கும்.

ஜெர்மனி ஜப்பானைத் தனக்கு உபயோகப்படும் படியான ஒரு கருவியாகக் கருதிக்கொண்டிருக் கிறது. அதிதூரக் கிழக்கில், பிரிட்டனுடைய பாது காப்புகளைப் பயமுறுத்துவதற்கும், அமெரிக்கா யுத் தத்தில் கலந்துகொள்ளாமல் இருக்கும்படி மிரட்டு வதற்கும், ஜப்பான் ஜெர்மனிக்கு உபயோகமாயிருக் கிறது. ஜப்பானை ஆட்சிசெய்யும் வகுப்பினர்கள், ஏகாதிபத்தியக் கொள்கையை வளர்த்தது ஜெர்ம னிக்கு சௌகரியமாய்விட்டது. ஜப்பானுடைய முக் கியமான அரசியற்கொள்கை 'கோடோ' என்பது, அதாவது, ஜப்பான் மேல்தரமுள்ள சமுதாயத்தைச் சேர்ந்ததென்றும், ஆகையால் கீழ்த்தரமுள்ள நாட்டு மக்களை அடிமைப்படுத்தி ஆட்சிசெய்ய நியமிக்கப் பட்டிருக்கிறதென்றும், ஜப்பானியர்கள் நம்புகிறார் கள். ஜப்பான் பரம்பரையாக ராணுவப்பிரபுக்க ளால் ஆளப்படுகிறது; அங்குள்ள கல்வி, பெரும் பான்மையான மக்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டு மென்றும், ஜப்பான் இதர நாடுகளை ஜெயிக்கவேண்டு மென்றும் போதிக்க உதவுகிறது. ஆனால் நாட்டு மக்கள் சமாதானத்தை விரும்புகிறவர்கள்; யுத் தத்தில் களைத்துச் சோர்ந்தவர்கள். ஜெர்மனியி லுள்ள நாஜிகளுடைய ஆட்சியைப்போல், ஜப்பானி லும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சென்ற நூற்றாண் டின் கடைசியில், ஜப்பான் தன்னைப் புதிய முறை யில் புதுப்பித்துக்கொண்டது முதல் சமயம் வந்த போதெல்லாம் இதர நாடுகளிடம் சண்டையிட்டுச் சில பாகங்களைப் பிடிங்கிக்கொண்டிருக்கிறது. 1894-ம் வருஷம் ஜப்பான் சீனதேசத்தைத் தாக்கியது. ஐரோப்பிய வல்லரசுகள் தலையிடாவிட்டால், இன் னும் அதிகமான பாகங்களைப் பிடுங்கிக்கொண்டிரு க்கும். 1910-ம் வருஷம் ரஷ்யாவுடைய மாகாணமாகிய கொரியாவைப் பிடித்துக்கொண்டது. 1915-ம் வருஷம் முதல், சீன தேசத்தின்மேல் அதிக்கிரமித்து, கடைசியில் 1931-ம் வருஷம் மஞ்சுகோவைக் கைப்பற்றி விட்டது. 1937-ம் வருஷம் முதல் சீனதேசத்துடன் தொடர்ந்து போர் நடத்திக்கொண்டுவருகிறது.


ஆனால் உண்மையில், பலமுள்ள நாடுகள் வேலை யாயிருக்கும்போது, ஜப்பான் தன்னுடைய சூழ்ச்சி களைச் செய்யும். ரஷ்யா மிகவும் பலஹீனமாயிருக் கும்போது, கொரியாவைப் பிடித்துக்கொண்டது. ஐரோப்பிய வல்லரசுகள் 1915-ம் வருஷம் யுத்தத்தில் இறங்கியிருக்கும்போது, தான் கேட்கும் 21 காரியங் களை சீன தேசம் செய்யவேண்டும் என்று ஜப்பான் கேட்டது. 1917-ம் வருஷக்குப் பிறகுகூட, அதாவது ஜெர்மனிக்கு விரோதமாக, சீனா, ஜப்பானிடம் நேச நாடாகச் சேர்ந்த பிறகு, தான் முன்பு கேட்டதை மறுபடியும் வற்புறுத்திக்கேட்டது. ஐரோப்பிய வல் லரசுகள் பலத்துடன் இருந்தபோது, வாஷிங்டன் உடன்படிக்கைகளுக்கு 1921-ம் வருஷம் ஒத்துக்கொண் டது. பொருளாதார நெருக்கடி ஐரோப்பாவில் ஏற் பட்டபோது, மஞ்சுகோவைப் பிடித்துக்கொண்டது. நாஜிகளுடைய கொடுமைகள் சம்பந்தமாக ஐரோப்பா கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் போது, சீன தேசத்தின்மேல் படையெடுத்திருக்கிறது. ஐரோப்பாவில் கொள்ளைக்கூட்டத்தினரின் கொடுங் கோலாட்சியை வீழ்த்தவேண்டும் என்று முயற்சி செய்யும் காலத்தில், பிரான்சு தேசம் ஹிட்லரின் காலடியில் விழுந்து கிடக்கும் சமயத்தில், ஜப்பான் தெற்கு நோக்கி இந்நாடுகளின் குடியேற்றப் பிரதேசங் களைக் கைப்பற்ற முயற்சி செய்கிறது.

ஜெர்மனியும், இடாலியும், ஐரோப்பாவில் தலை விரித்துத் தாண்டவமாடியதுபோல, ஆசியாவில் தான் தலைமை ஸ்தானம் பெறவேண்டுமென்று நினைத்து சென்ற செப்டெம்பர் மாதம் அச்சு ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டது. ஆசியாவில் "புதிய திட்டம்" ஏற்படுத்த ஜப்பான் செய்யும் முயற்சிக்கு, சர்வாதிகாரிகள் உதவியளிக்க வாக்களித்திருப்பார் கள். சீனதேசத்தை ஜெயித்து, டச்சு கிழக்கு இந் தியத் தீவுகள், சையாம், பிரெஞ்சு இண்டோ-சைனா ஆகியவைகளைக் கைப்பற்றிக்கொண்டால், பசிபிக் கடலில், தான் ஆதிக்கம் பெறலாமென்று ஜப்பான் நினைக்கிறது. இதனால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திற்கும், அமெரிக்காவுக்கும் தொந்தரவு கொடுக்க லாமென்பது ஜப்பானின் நோக்கம்.

டச்சுக் கிழக்கிந்திய தீவுகளைத் தந்திரத்தினால் கைப் பற்றிக்கொள்ள எண்ணியதை, லண்டனிலுள்ள சுதந்தர டச்சு அரசாங்கம், ராணி வில்ஹெல்மினா வின் தலைமையின்கீழ் அனுமதிக்கவேயில்லை. சையாம் என்ற தாய்லாந்துக்கும், இண்டோ–சைனா வுக்கும் ஏற்பட்ட தகராறுகளைத் தீர்ப்பதற்காக, பிரிட்டிஷ் துருப்புகள் சையாம் குடாக் கடலிலும், சையாம் எல்லையிலும் ஏராளமாக இருப்பதாகப் பொய்க் கதைகளைச் சொல்லி, தான் மத்தியஸ்த ஸ்தானத்தைப் பெற்றது. இண்டோ–சைனாவிலிருந்து சிலபாகம் தனக்குக் கொடுக்கவேண்டுமென்று தாய் லாந்து கேட்டது. இது ஜப்பானுடைய தூண்டுதலின் மேல் நடந்தது. பிரெஞ்சு மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்க முடியாத நிலைமையிலிருந்ததால், இண்டோ-சைனா, தாய்லாந்து கேட்டதைக் கொடுத்து விட்டது. ஆனால் பிரிட்டனோடு தொன்றுதொட்டு நேசப்பான்மையாயிருந்ததை தாய்லாந்து உடனே வற்புறுத்தியிருக்கிறது. பிரிட்டனால் தாய்லாந்துக்கு யாதொரு பயமுமில்லை என்ற விஷயம் விளக்க மாகத் தெரிந்துவிட்டது.

ஜப்பானுக்கு, தாய்லாந்து அரச சபையில் எவ் வளவு சலுகையிருந்தாலும், தாய்லாந்திலுள்ள ஜப்பானியர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், தாய்லாந்து, ஜப்பானால் உபயோகிக்கப்படும் ஒரு கருவி யாகாது; ஜப்பா னுடைய ஆதிக்கத்தைத் தடுக்க, தன்னால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு தடுக்குமென்று தெரிகிறது. ஜப்பானுக்கு இரா கெனல் என்ற கால்வாயின் மேல் கண்ணோட்டம். சிங்கப்பூர் கடற்படைத் தளத் திற்கு எதிரிடையாக அவ்விடத்தில் ஜப்பான் ஒரு தளம் ஏற்படுத்தவேண்டுமென்று நினைத்திருக் கிறது.

சீனதேசம் ஜப்பானுடைய நோக்கத்தை நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறது. மார்ஷல் சியாங்கே ஷெக் என்ற பெருந்தலைவருடைய தலைமை யில், ஜப்பானை சென்ற நான்கு வருஷங்களாக




# தூர கிழக்கு பிரதேச படம்

அளவு 1 அங்குலம்=946 மைல்கள்

Helioxinco., Survey Office, Madras. 1941.

Reg. No. 44/2 Copies 9700

எதிர்த்துப் போராடிக்கொண்டு வருகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும், அமெரிக்காவும், ரஷ்யாவும், சீனாவுக்கு யுத்த ஆயுத உதவியும், பண்டங்கள் உதவியும் கொடுத்து வருகின்றன. பர்மா ரோட்டு திறந்ததினால், ரங்கூனில் இறக்கப்படும் சாமான்கள் சீனாவுக்கு வருமென்ற சௌகரியம் ஏற்பட்டிருக்கிறது. ரங்கூன் ரயில்வேயில் வடக்கு முடியோடு சேர்க்கப்பட்ட ரயில்வே தொடர்ச்சி யுத்த ஆயுதங்கள் வருவதற்கு மிகவும் சௌகரியமாயிருக்கும்.

இந்த நிலைமையில், கோனேயி அரசர் என்ற ஜப்பானிய மந்திரி, சீன யுத்தத்தைப்பற்றி மனக் கலக்கத்துடன் பேசியிருக்கிறார் என்றால் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவர் கூறியதாவது :—
"இந்த யுத்தம் ஆரம்பித்து இப்போது ஐந்தாவது வருஷம் தொடங்கிவிட்டது. ஆனால் முடிவுக்கு வருவதாகத் தெரியவில்லை. லட்சக் கணக்கான 'என்' கள் (ஜப்பானிய நாணயம்) செலவழிந்து விட்டன ; ஆயிரக் கணக்கான சிப்பாய்கள் உயிரிழந்தார்கள். இதற்காக நான் வருந்துகிறேன்."

சீனாவினுடைய ஏராளமான ஜனத் தொகையின் காரணமாக, யுத்தத்தில் எவ்வளவு பேர் இறந்தாலும், அதனால் சீனா பாதிக்கப்படுவதில்லை. இப்போது சீனர்கள் மேற்குப் பிரதேசங்களில் யுத்தத்திற்காகத் தயார் செய்யப்படுகிறார்கள். ஆனால் ஜப்பான் இம்மாதிரியான நிலைமையில் இல்லை. அதனுடைய யுத்தச் செலவு அதிகரித்துக்கொண்டே போகிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால், ஜப்பான் "இன்சால்வெண்டு" ஆய்விடவேண்டியதுதான். அதனுடைய பொருளாதாரத் திட்டம், இந்த வருஷம், முழு வரும்படியில் பாதி தொகை, முன்பிருந்ததைவிட அதிகமாகச் செலவாகுமென்றும் சீன யுத்தக்கணக்கு இதில் சேரவில்லை என்றும், ஒரு வருஷ யுத்தச் செலவு சாதாரண மொத்த அரசாங்க வரும்படி எவ்வளவோ, அவ்வளவு ஆகிறதென்றும் தெரிகிறது.

சோவியட் ரஷ்யா ஜப்பானை மிகுந்த கவனத்துடன் பார்த்துக்கொண்டு வருகிறது. மங்கோலியாவில் ஜப்பான் செய்துவருகிற வேலைகளும், மஞ்சூரியா, ஜெஹோல், என்ற இடங்களில் யுத்த சௌகரியங்களுக்கு வேண்டிய மாதிரி முக்கியமான ரயில்வேக்கள் கட்டுதலும், ரஷ்யாவின் கடற்கரை மாகாணங்களில், ஜப்பானியர் மீன்பிடிப்பதென்ற சாக்கைச் சொல்லிக்கொண்டு கப்பல்களை அனுப்பி, விஷயங்களை அறிந்துகொள்ளுதலும், ஆகிய விஷயங்களால் ஜப்பானுடைய உண்மையான நோக்கங்களை ரஷ்யா நன்றாகத் தெரிந்துகொண்டது.

கடைசியாக உள்ளது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் சிறப்பாக ஆஸ்டிரேலியாவும் இவைகள் முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கின்றன. ஆகாய விமானப்படைத்தலைவர் சர் ராபர்ட் புருக் பாப்பம் என்பவரின் தலைமையின் கீழ் சிங்கப்பூர் ராணுவஸ்தலம் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆஸ்டிரேலியா அரசாங்கம் ஜப்பானுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்திருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கமும் ஆஸ்டிரேலியா அரசாங்கமும் ஜப்பான் ஏதாகிலும் அதிக்கிரமமாக இனிமேல் செய்யுமானால் அமெரிக்காவின் உதவியைப் பூரணமாக நம்பலாம் என்று நினைத்திருக்கின்றன. அமெரிக்க பிரசிடெண்ட் ரூஸ்வெல்டும் இது சம்பந்தமாக பலமான வாக்குறுதி யளித்திருக்கிறார். அமெரிக்கா பசிபிக் மகா சமுத்திரத்தில் சண்டைக்கு இழுக்கப்பட்டாலும் பிரிட்டனுக்குச் செய்யும் உதவி தடைப்படாது என்று கூறியிருக்கிறார்.

ஆகவே ஜப்பான் சௌகரியமான நிலைமையில் இல்லை என்பதை உணரவேண்டும். வடக்கில் ரஷ்யா, சீனா, கிழக்கில் அமெரிக்கா, தெற்கில் பிரிட்டன் இவைகளுடைய யுத்தபலம் ஜப்பானுக்கு எதிராக உபயோகப்படுத்தப்படலாம். இதல்லாமல் டச்சு கிழக்கு இந்தியத் தீவுகள், இண்டோ-சைனா இவைகளின் யுத்தபலமும் ஜப்பானுக்கு எதிராக இருக்கிறது. சீனயுத்தத்தில் நான்கு வருஷங்களில் 10 லட்சம் சிறந்த சிப்பாய்களை இழந்திருக்கிறது. ஜப்பான் அதிகப்படியான ஜனத்தொகை உள்ளது. அதற்குவேண்டிய உணவுப்பொருள் இல்லாதது. இந்த மாதத்திலிருந்து ஜப்பானில் அரிசி விகிதாசாரம் போடப்பட்டுவருகிறது. எண்ணெய், ரப்பர், இரும்பு, பஞ்சு, எருவுப்பொருள்கள் முதலியவற்றிற்கு பிரிட்டனும் அமெரிக்காவும்தான் உதவி செய்ய வேண்டும். இந்தக் காரணங்களெல்லாம் ஜப்பான் தெற்கில் ஏதாவது முயற்சிசெய்வதற்கு எதிரிடையாயிருக்கின்றன.

---

## மேன்மைதங்கிய கவர்னரின் யுத்த நிதி.

### கோடி நாள் கொண்டாட்டம்.

சென்னை மாகாணக் கவர்னர், மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப், அவர்களால் தொடங்கப்பட்ட யுத்த நிதி இப்போது ஒரு கோடி ரூபாய்க்குமேல் வசூலாகி இருக்கிறது. கோடி ரூபாய் வசூலானது, நமது மாகாணம் பெருமைப்படும்படியான காரியம். ஏனென்றால், இந்தியாவில் வேறெந்த மாகாணத்திலும், ஒரு கோடி ரூபாய் இன்னும் வசூலாகவில்லை. கோடி ரூபாய வசூலான சம்பவத்தைக் கொண்டாடுவதற்காக, சென்னைத் தலைநகரிலும் மாகாணங்களில் அநேக இடங்களிலும், ஊர்கோலங்கள், பொதுக்கூட்டங்கள், ஏழைகளுக்கு உணவளித்தல் முதலிய விசேஷங்கள் ஏப்ரல்மீ 6, 7உ களில் நடைபெற்றன. யுத்த முயற்ச்சிக்காக நமது மாகாணம் ஒரு கோடி ரூபாய் கொடுத்ததைப்பற்றியும், மேன்மைதங்கிய சர் ஆர்தர் ஹோப் அவர்களுடைய ஒப்பற்ற உற்சாகத்தினாலும் மாகாண மக்களின் உண்மை உணர்ச்சியினாலும், இந்தப் பெருமை நமக்குக் கிடைத்ததென்றும், பொதுக்கூட்டங்களில் தலைவர்கள் பேசினார்கள்.

சென்னையில் பல 'டிவிஷன்'களில் அநேக ஏழைகளுக்கு 6உ ஞாயிற்றுக்கிழமை உணவளிக்கப்பட்டது. மேன்மை தங்கிய கவர்னர், சர் ஆர்தர் ஹோப் இதைத் தானே நேரில் சென்று பார்வையிட்டார். சென்னை வெற்றி ஞாபகார்த்தக் கட்டட முன்னிலையில் 6உ மாலை ஒரு அருமையான ராணுவ ஊர்கோல விழா நடைபெற்றது. ஒரு லட்சத்துக்கு மேல் சென்னை நகரவாசிகள் அதைப் பார்க்கக் கூடியிருந்தார்கள். வெற்றி ஞாபகார்த்தக்கட்டடத்திலும் வழிகளிலும் பலவிதமான கொடிகள் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன. மேன்மை தங்கிய கவர்னர், சர் ஆர்தர் ஹோப் அவர்களும், லேடி ஹோப் அவர்களும் ஒரு அழகிய "கோச்" வண்டியில் குதிரைப்படை மெய்க்காப்பாளர்கள் சூழ ஊர்வலமாக வந்தார்கள். அவர்கள் வரும்போது பாதைகளில் இருபுரமும் கூடியிருந்த மக்கள் கரகோஷம் செய்தார்கள்.

மேன்மைதங்கிய கவர்னரின் முன்னிலையில் சென்னையிலுள்ள அநேக துருப்புகள் ஒன்றன்பின்னொன்றாக நடந்து சென்றன. சென்னைப்பிரதேச ராணுவ தலைமைப்படை, கவர்னர் மெய்க்காப்புப்படை, பிரிட்டிஷ் காலாட்படை, இந்தியக்காலாட்படை, 'சிவிக் கார்ட்ஸ்' எனற பொதுமக்கள் உதவிப்படை, ஆம்புலன்ஸ் என்ற முதல் உதவி சிகிச்சைப்படை, ஆகாய விமான எதிர்ப்புப் பீரங்கிப்படை, விஷக்காற்றுப் பாதுகாப்புப்படை, செஞ்சிலுவைச் சங்கப்படை, யுத்த உதவி இனாம்கள் சங்கம், யுத்த 'சப்ளை' டிபோ காரியாலயத்தார், ஏ.ஆர்.பி. என்ற விமான எதிர்ப்பு முன்ஜாக்கிரதைப்படை முதலியவைகள் சென்ற பவனி சென்னை மக்கள் மனத்தில் பதியும்படியான ஒப்பற்ற காட்சியாயிருந்தது.

அதற்குப்பின் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையும், சென்னை பறக்கும் சங்க ஆகாயவிமானங்களும் பறந்து சென்றன. இவைகளில் நான்கு ஆகாய விமானங்கள் சென்னை கவர்னர் யுத்தநிதிப்பணத்திலிருந்து வாங்கப்பட்டவை.

பின்பு சென்னை பறக்கும் சங்கத்தை சேர்ந்த மிஸ்டர் டிண்டேல் பிஸ்கோ என்பவர் ஆகாயவிமான வேடிக்கைகள் சில காண்பித்தார். ஆகாயத்தில் தலைகீழாக விமானத்தைச் சுற்றுவது, திடீரென்று கீழே பாய்ந்து உடனே மேலே செல்லுவது முதலிய பார்ப்பதற்கு அபாயகரமான வேடிக்கைகளைச் செய்தார்.

அதன்பின் கவர்னரும் லேடி ஹோப்பும் ஊர்வலத்துடன் அரசாங்க மாளிகைக்குச் சென்றார்கள். திங்கட்கிழமை 7உ மாலை சென்னை செனட் மண்டபத்தில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடை

பெற்றது. ஏராளமான மக்கள் ஆண்களும் பெண்களும், கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். கவர்னர் துரையவர்கள் திடீரென்று உடம்பு அசௌக்கியமான காரணத்தால், கூட்டத்திற்கு வந்து தலைமை வகிக்க முடியவில்லை. அவருக்குப் பதிலாக, கவர்னரின் முதல் ஆலோசனையாளரான, சர் ஜார்ஜ் போக் தலைமை வகித்தார் மேன்மைதங்கிய லேடி ஹோப் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

சர் கே. வி. ரெட்டி நாயுடு, சர் மகமது உஸ்மான் சாஹிப், ராவ்பகதூர் எம். சி. ராஜா, மிஸ்டர் சி. பாசுதேவ், மிஸ்டர் ஆல்பர்ட் ஜேசுதாசன், மிஸ்டர் ஆர். டி. டெனிஸ்டன் முதலியவர்கள் கோடி நாள் கொண்டாட்ட விழாவில் பேசினார்கள். கவர்னர் அவர்களுடைய முயற்சியை அவர்கள் மிகவும் பாராட்டி, மாகாண மக்கள் யுத்த உதவிக்கு தங்களுடைய முழு ஆதரவையும் காட்டியதை விளக்கிக் காட்டி, அவர்கள் பேசினார்கள்.

முடிவுரையில், சர் ஜார்ஜ் போக் அவர்கள் ஒரு கோடி ரூபாய் வசூலானது ஒரு சிறந்த வெற்றி யென்றும், சென்னை மாகாணம் அதற்காகப் பெருமை கொண்டாடுவது நியாயம்தானென்றும் கூறினார்.

கவர்னரின் யுத்த நிதிக் கோடிக் கொண்டாட்டம் 6, 7 தேதிகளில் நடந்தது. ஆனால் சென்ற வெள்ளிக்கிழமை 4-ந் தேதியே ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூலாய்விட்டது. அப்போது மேன்மை தங்கிய கவர்னர் மாகாணப் பொதுமக்களுக்குத் தன்னுடைய நன்றியைத் தெரிவித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அதில், கவர்னர் யுத்த நிதி, ஒன்பது மாதங்களுக்குமுன் ஆரம்பிக்கப்பட்டதென்றும், இதற்குள் ஒரு கோடி வசூலானது பெருமைப்படத் தக்கதென்றும், நமது மாகாணம் மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டியாயிருக்கிறதென்றும், இனிமேல் சென்னை தன்னுடைய முயற்சியை இன்னும் அதிகப்படுத்தவேண்டுமென்றும், எல்லாரும் சுதந்தரமும், நியாயமும், வெற்றியும் பெறவேண்டுமென்று பிரார்த்தனை செய்யவேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

ஒரு கோடி ரூபாய் யுத்த நிதிக்குக் கொடுக்கப்பட்ட விவரங்கள் ஜில்லா வாரியாய் கீழே தரப்பட்டிருக்கிறது :—

| ஜில்லா. | | கொடுத்த தொகை. ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| குண்டூர் | .. | 8,70,171 | 14 | 6 |
| சென்னை | .. | 7,66,136 | 2 | 4 |
| மதுரை | .. | 7,46,770 | 5 | 10 |
| ராமநாதபுரம் | .. | 7,02,959 | 14 | 10 |
| தஞ்சாவூர் | .. | 5,94,839 | 1 | 6 |
| கர்னூல் | .. | 5,48,070 | 3 | 1 |
| விசாகப்பட்டணம் | .. | 5,47,723 | 9 | 5 |
| கிழக்கு கோதாவரி | .. | 5,35,722 | 3 | 6 |
| கிருஷ்ணா | .. | 4,79,732 | 1 | 5 |
| சேலம் | .. | 4,05,331 | 3 | 8 |
| நெல்லூர் | .. | 4,02,363 | 15 | 5 |
| கடப்பை | .. | 3,73,202 | 12 | 7 |
| கோயம்புத்தூர் | .. | 3,56,840 | 11 | 4 |
| வட ஆற்காடு | .. | 3,51,036 | 11 | 6 |
| திருச்சினாப்பள்ளி | .. | 3,26,942 | 7 | 6 |
| மலையாளம் | .. | 3,18,175 | 10 | 5 |
| செங்கல்பட்டு | .. | 3,16,719 | 15 | 6 |
| மேற்கு கோதாவரி | .. | 2,72,659 | 6 | 8 |
| திருநெல்வேலி | .. | 2,57,716 | 3 | 4 |
| அனந்தப்பூர் | .. | 2,55,517 | 0 | 2 |
| சித்தூர் | .. | 2,20,197 | 14 | 7 |
| தென் ஆற்காடு | .. | 2,13,763 | 1 | 10 |
| பல்லாரி | .. | 2,06,923 | 10 | 7 |
| நீலகிரி | .. | 1,48,489 | 11 | 7 |
| தென்கன்னடம் | .. | 91,928 | 11 | 11 |
| திருவாங்கூர் | .. | 15,562 | 0 | 0 |
| மைசூர் | .. | 10,954 | 13 | 3 |
| ஆக மொத்தம் | .. | 1,03,36,451 | 10 | 3 |

# டோவரில் நடந்த சண்டை,

## வானத்தில் ஜெயித்த விந்தை.

[டோவர் என்பது பிரிட்டனின் தென்கிழக்கிலுள்ள மிகவும் முக்கியமான துறைமுகப் பட்டணம். அதற்கும் பிரெஞ்சு தேசத்துறைமுகப்பட்டணமாகிய கலேயிக்கும் 25 மைல் தூரம் தான். இவைகளுக்கிடையில் இருப்பது டோவர் ஜலசந்தி. டோவரைத் தாக்குவதற்காக சென்ற ஜூலை மீ 29உ ஜெர்மன் ஆகாய விமானங்கள் அணிவகுத்து வந்ததும் அவைகளைச் சின்னாபின்னப்படுத்தி பிரிட்டிஷ் விமானப்படை ஜெயித்ததும் "வார் இலஸ்டிரேடெட்" என்ற பிரிட்டிஷ் யுத்த சஞ்சிகையில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது அந்தக் கட்டுரையினுடைய சாரம் கீழே தரப்படுகின்றது :—]

ஜூலை மீ முடியுந்தருவாயில் டோவர் என்ற துறைமுகப்பட்டணம் ஒருநாள் காலை வெய்யிலில் அழகுடன் விளங்குகிறது. ஒரு பக்கம் வெண் சிகரங்கள் உள்ள மலைகள்; ஒரு பக்கம் ஒரு பிரம்மாண்டமான பழைய கோட்டை; மற்றொரு பக்கம் நீண்ட வீடுகள் நிறைந்த வளைவு; வேறொருபக்கம் சிறு கப்பல்களும் பெருங்கப்பல்களும் சளைப்பில்லாமல் சதா இங்குமங்கும் போய்க்கொண்டிருக்கும் காட்சி.

இந்தக் காட்சியைக் கலைப்பதற்கு ஒரு ஜெர்மன் ஆகாய விமானம் வேவுபார்ப்பது என்ற முறையில் முதலில் டோவர் பட்டணத்தின்மேல் பறந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு, சூரியனிடமிருந்து பாய்ந்ததுபோல ஏராளமான ஜெர்மன் யுத்த விமானங்கள் ஆகாயத்தில் தோன்றின. அவைகளில், 30 அல்லது அதற்கு மேற்பட்ட 'ஜங்கர்ஸ்' என்ற விமானங்கள், 87 'டைவ் பாம்பர்ஸ்' என்ற கீழே பாய்ந்து வெடிகுண்டு போடும் விமானங்கள், இவைகளைப் பாதுகாக்க 'மெசர்ஸ் கிமிட்' என்ற ஒரு வகைப் போர்புரியும் ஆகாய விமானங்கள் 50-ம் அணிவகுத்துப் பறந்தன. முதலில் வெடி குண்டு விமானங்கள் கடலின் அலைகளைப்போல் வரிசை வரிசையாக துறைமுகத்தை நோக்கியும், அங்குள்ள பலவகைப்பட்ட கப்பல்களை நோக்கியும், பாய்ந்தன. மேலே ஆகாயத்தில் ஜெர்மன் போர் விமானங்கள் ('பைடர்ஸ்') கீழே சென்ற விமானங்களைப் பாதுகாக்கும் பொருட்டு பகுதி பகுதியாகப் பறந்து கொண்டிருந்தன.

ஆனால் பிரிட்டிஷ் பாதுகாப்பு முறைகள் அதிக முன்ஜாக்கிரதையுடன் இருந்தன. ஒரு வினாடி நேரத்துக்குள் அவைகள் நெருப்புப் பொரிபறக்கும் படியாக வேலை செய்தன. ஆகாய விமான எதிர்ப்புப் பீரங்கிகள் கடுமையாகக் குண்டுகளை மேல்நோக்கி வீசின; இரண்டு ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள்மேல் நேர்முகமாக அக்குண்டுகள் பட்டு அவைகள் கீழே விழுந்தன. உடனே இதர விமானங்கள் கீழ்நோக்கிப் பாய்ந்தன.

கரையிலிருந்து இந்த ஆகாய விமானப் போரைப் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் வெடி குண்டுகள் மாட்டப்பட்டிருக்கும் இடத்திலிருந்து விடுவிக்கப்படுவதையும், அவைகள் கீழ் நோக்கி விழுவதையும், நன்றாகக் கண்டார்கள். வெடிகுண்டுகள் சமுத்திரத்தில் விழுந்ததும், தண்ணீர், மேலே அதிக தூரம் எழும்பியது. துறைமுகத்திலுள்ள படகுகள் 'கார்க்'குகள் போல இங்குமங்குமாய் அசைந்தன. கரையோரத்தில் உள்ள வீடுகள் வெடி குண்டுகள் வெடிப்பதினாலும், பீரங்கிகள் சுடுவதினாலும், அதிர்ச்சியடைந்தன.

ஜெர்மனியர்கள் ஒரு விஷயம் தவறாக நினைத்துக் கொண்டார்கள் என்று தெரிகிறது. அதாவது, தாங்கள் தாக்கினதும் பிரிட்டிஷ் பாதுகாப்புப் படை



டோவரில் நடந்த சண்டை.

கள் வந்து போர் புரிவதற்கு கொஞ்சநேரம் ஆகும் என்று நினைத்தார்கள் போலும். கீழே பாய்ந்த விமானங்கள் மறுபடி மேல்நோக்கிப் பாய்வதற்குள் அவைகளுக்குத் துணைப்படையான விமானங்கள் எல்லா திக்குகளிலும், பிரிட்டிஷ் 'ஹரிகேன்', 'ஸ்பிட்டையர்' என்ற நாஸகாரிகளால் தாக்கப்பட்டன.

ஆகாயம் ஒரு விசாலமான யுத்த அரங்கமாக விளங்கிற்று. யுத்தப் வீராவேசத்தில் சிநேகிதனென்றும், விரோதியென்றும் கண்டுபிடிக்கமுடியாத அவ்வளவு கடும் வேகத்தில் ஆகாய விமானங்கள் கீழே பாய்வதும், பின்னர் வளைந்து வேகமாய் ஓடுவதும், தலைகீழாகக் குட்டிக்கர்ணம் போடுவதும், ஆக ஒரே குழப்பமாய் இருந்தது. வானத்தில் கடந்த போரை கண்ணுற்கண்டவர்கள் இலையுதிர் காலத்தில் விழும் இலைகளைப்போல ஜெர்மன் விமானங்கள் விழுவதைப் பார்த்தார்கள். ஒரு பிரிட்டிஷ் நாசகாரிப்படை 4 'மெசர்ஸ் கிமிட்' என்ற ஜெர்மன் விமானங்களையும், ஒரு ஜெர்மன் வெடிகுண்டு விமானத்தையும் வீழ்த்தி கடலுக்குள் தள்ளியது. 'ஹரிகேன்' என்ற பிரிட்டிஷ் படை நான்கு ஜெர்மன் 'ஜங்கர்' களையும், ஒரு 'பைடர்' என்ற விமானத்தையும் சுட்டு வீழ்த்திவிட்டது. 'ஸ்பிட்பைர்' என்ற ஒரு பிரிட்டிஷ் நாசகாரியின் விமான ஓட்டி மூன்று ஜெர்மன் 'ஜங்கர்'களை ஒன்றன்பின்னொன்றாகத் தாக்கி வீழ்த்தியது ஒரு முக்கியமான சம்பவம்; ஒரு ஜெர்மன் விமானம் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டு தண்ணீரில் விழுந்துவிட்டது; மற்றொன்று நெருப்புப்பற்றி எரிந்துபோய்விட்டது; மூன்றாவது விமானம் சேதமடைந்து தப்பி ஓடிவிட்டது. வேறொரு சண்டையில் இரண்டு ஜெர்மன் விமானங்கள் நெருப்புப்பற்றி எரிந்து கொண்டே சமுத்திரத்தில் விழுந்துவிட்டன. அவைகளைச் சுட்டு வீழ்த்தின பிரிட்டிஷ் விமானம், கடலோரமாக வீட்டுக் கூரைகளின்மேல் பறந்து கொண்டு, விமான தளத்திற்குச் சென்றது. அது வெடி குண்டுகளால துளைக்கப்பட்டிருந்தது. கீழிருந்து பார்த்தவர்கள், அந்த விமானத்துக்குள்ளிருந்து வெற்றிக் கறிகுறியாக விமான ஓட்டி கையசைப்பதைப் பார்த்தார்கள்.

இந்த விமானச் சண்டையைப் பார்த்த ஒருவர் கூறுவதாவது :—"கொஞ்சநேரம் வரைக்கும் கடோமான சண்டை நடந்தது. ஆகாய விமானங்கள் கீழே பாய்ந்தன; யந்திர பீரங்கிகள் குண்டுகள் போட்டுக்கொண்டே யிருந்தன; விமான எஞ்சின்கள் அதிகமான சப்தம் செய்துக்கொண்டிருந்தன. வானத்தின் பல பாகங்களில், நாய்ச் சண்டைகளைப்போல, விமானச் சண்டைகள் நடைபெற்றுக்கொண்டே யிருந்தன." அரை மணி நேரம் இந்த விதமாகக் கடோப் போராட்டம் நடைபெற்றது. நாஜிகள் அதிகமான ஆகாய விமானங்கள் உடையவர்களா யிருந்தபோதிலும், இந்தச் சண்டை போட்டது போதும் என்ற எண்ணங் கொண்டார்கள். அந்த அரைமணி நேரத்தில், எட்டு 'ஜங்கர்ஸ்' ஜெர்மன் ஆகாய விமானங்களும், 'மெசர்ஸ் கிமிட்ஸ்' விமானங்களில் ஒன்பதும், அழிக்கப்பட்டன. அதாவது, சண்டையில் ஈடுபட்ட 80 ஜெர்மன் விமானங்களுள் 17, அல்லது நூற்றுக்கு 21 அழிக்கப்பட்டன. அணிவகுத்து வந்த அவர்களுடைய ஒழுங்குமுறை யெல்லாம் அலங்கோலம் செய்யப்பட்டவுடன், தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் என்று மற்ற விமானங்கள் இங்கிலீஷ் சானல் என்ற ஆங்கிலக் கால்வாயைத் தாண்டி, பிரிட்டிஷ் நாசகாரிகளால் துரத்தப்பட்டு ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டன.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, இன்னும் பல ஜெர்மன் விமானங்கள் விரைவான முடிவுக்கு வந்துவிட்டன. சில மீன்பிடிக்கும் படகுகளின் அருகாமையில் மூன்று வெடிகுண்டுகளைப் போட்ட ஒரு ஜெர்மன் விமானம் பீரங்கிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அந்தப் படகுகளின் தலைவன் ஒருவன் துறைமுகத்துக்கு, சௌக்கியமாய் வந்து சேர்ந்தபின் கூறியதாவது :—"நாங்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது, மேகங்களிலிருந்து திடீரென ஒரு கருப்பு ஆகாய விமானம் எங்களை நோக்கி வந்து சுமார் 500 அடி உயரத்திலிருந்து மூன்று வெடிகுண்டுகளைப் போட்டது. அந்த வெடிகுண்டுகள் நாங்களிருந்த இடத்துக்குச் சற்று தூரத்தில் வெடித்தன; வெடித்த அதிர்ச்சி எங்களுடைய சிறுபடகுகளை அப்படியே சமுத்திரத்திலிருந்து தூக்கிவிட்டது போலிருந்தது." அந்தப்படகுகள் கரையை நோக்கிச் சென்றன. அப்படித் திரும்பிப் போகும்போது யந்திர பீரங்கிகள் சுடும் சத்தம் கேட்டது. என்னவென்று மேலே பார்த்ததில், மூன்று பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் அந்த ஜெர்மன் விமானத்தைத் தாக்குவதைக் கண்டார்கள். அது ஜெர்மனிக்குத் திரும்பிப் போய்ச் சேரவேயில்லை.

இந்த யுத்தத்தில் நடந்த சண்டைகளெல்லாவற்றிலும் கடோமானது டோவர் யுத்தம் என்று சொல்லலாம். பிரிட்டனுடைய மிக முக்கியமான கடற்படைக் கோட்டைபோலுள்ள டோவரின்மேல் ஏராளமான விமானங்களைக்கொண்டு ஜெர்மனி தாக்கியது பகைவர்களுக்கு அதிகமான நஷ்டம் ஏற்பட்டது. மிகுதியாயிருந்த ஜெர்மன் விமானங்கள் விரட்டித் துரத்தியடிக்கப்பட்டன. டோவர் கரையோரத்தில் ஒரு ஜெர்மன் வெடி குண்டு கூட விழவேயில்லை. டோவரைப் பாதுகாத்ததில், ஒரு விமான நஷ்டமும், இரண்டு விமானங்கள் சிறிது பழுதடைந்ததும், பிரிட்டனுக்கு ஏற்பட்ட சேதம்.

இவையெல்லாம் ஒரு மணி நேரத்திற்குள் நடைபெற்றன. டோவர் கரை யோரத்தை மிகத் திறமை ாக பாதுகாத்த பிரிட்டிஷ் விமானங்கள், வெற்றிபெற்ற பெருமையினால், ஆகாயத்தில் சுற்றி சுற்றிப் பறந்தன. மற்றபடி, ஆகாயம் சுத்தமாக இருந்தது. டோவர் கோட்டை, ரோமர்கள் வந்த பண்டைகாலத்திலிருந்து, அநேக கலவரமான நூற்றாண்டுகளைப் பார்த்திருக்கிறது; அநேக யுத்தங்களெல்லாம் வெற்றியாய் முடிந்ததை கண்டிருக்கிறது; அநேக படையெடுப்புகளை யெல்லாம் தடுத்து விரட்டியிருக்கிறது.

இந்த ஆகாய விமான வெற்றிக்குப் பிறகு, இங்கிலாந்தினுடைய தோற்கடிக்க முடியாத வலிமைக்கு ஒரு அறிகுறியைப்போல, டோவர் விளங்கியது.

---

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவு செய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.**

[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.